1973 ஏப்ரல் 2]

அதற்குப் பதிலாக, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் மீன் வளர்ப்பு இலாகா அதிகாரி ஒருவரை நியமித்து, இந்தத் திட்டத்தை முழுக்க அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மீன் உற்பத்திக்கான திட்டத்தைப்பற்றிச் சொன்னேன். இந்த உற்பத்தி செய்யும் திட்டம் மீனளத் துறையில் இருக்கும் அதிகாரிகள் மூலம்தான் செய்யப்படுகிறது. அந்தக் குஞ்சுகளையெல்லாம் உற்பத்தி செய்து, பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றிய ஏரிகளில், குளங்களில் விடப்படுகிறது. அதைப் பாதுகாக்கும் பொறுப்புத்தான் அந்தத் துறை அதிகாரிகளிடத்தில் விடப்பட்டிருக்கிறது. எனவே, அந்த மீன் குஞ்சுகளைப் பொறிப்பது, வளர்ப்பது போன்றவற்றை மீனளத்துறைதான் பொறுப்பேற்று நடத்துகிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, 'ட்ரௌட்' வகை மீன்களைப் பெருக்கத் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த 'ட்ரௌட்' மீன்களை நீலகிரி மாவட்டத்தில் அவலாஞ்சி என்ற பகுதியில் பெருக்கிக்கொண்டு வருகிறோம்.

Fishing Harbour at Chinnamuttom

* 602 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the United Nations Development Project have undertaken any pre-investment survey of berthing facilities under fisheries development scheme at Chinnamuttom near Cape Comorin; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பெங்களூரிலுள்ள முன்னோடி முதலீட்டு நில ஆய்வு நிறுவனம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்ன முட்டம் என்ற இடத்தில் நில ஆய்வு நடத்தி அங்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு மீன் பிடி துறைமுகம் கட்டுவதற்கான அறிக்கையை சென்னை மீனளத் துறை இயக்குநருக்கு அனுப்பியிருக்கிறது. பொதுப்பணித் துறையிடமிருந்து வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகளை மீனளத் துறை இயக்குநர் எதிர்நோக்கியுள்ளார்.

[1973 ஏப்ரல் 2

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பொதுப்பணித் துறையிலிருந்து அனைத்து விவரங்களும் தரப்பட்டு இருக்கின்றன. அதை மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம். அங்கேயிருந்து ஒப்புதல் வரவேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த சின்ன முட்டம் ஒரு ஆல்-டைம் போர்ட்' ஆகவும், ஒரு 'ஃபிஷ்ஷிங் கிரௌண்ட்' ஆகவும் இருக்கிறது என்று ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகிறது என்று சொல்கிறார்கள். அதைத் துரிதப்படுத்த அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் முதலிலே கூறியது போல இந்தத் திட்டத்தை ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பெங்களூரிலுள்ள முன்னோடி முதலீட்டு நில ஆய்வு நிறுவனம் ஆய்வு நடத்தி அறிக்கை அனுப்பியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், அங்கே சிறிய துறைமுகம் அமைக்க வசதி இருக்கிறது. கிட்டத்தட்ட 65 படகுகள் விட முடியும் என்ற அளவுக்கு வாய்ப்பு இருக்கிறது என்றும், நீர்ப் பணித் தொட்டி, உலர வைக்கும் கருவி, மீன்பிடித் தொழிற்சாலை இத்தனையும் வைப்பதற்கு வசதி வாய்ப்பு இருக்கிறது என்றும் அறிக்கைகொடுத்து இருக்கிறார்கள். மத்திய அரசு ஒப்புதல் கிடைத்தபிறகு, பொதுப்பணித் துறை ஒத்துழைப்போடு, மீனளத் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே ஒரு கோடி ரூபாய் செலவில் அந்த மீன்பிடி துறைமுகம் கட்டப்படவிருக்கிறது. அந்தச் செலவு செய்யும் அளவுக்கு மீன் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா? அதற்குரிய ரிட்டர்ன்ஸ் அதிலே கிடைக்குமா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் ஏற்கெனவே கூறியதுபோல், அந்த ஐக்கிய நாட்டு நிறுவனம் இவைகளையெல்லாம் மனதில்வைத்து ஆராய்ச்சி செய்வது லாபகரமாக இருக்கும் என்று சொல்லித்தான் இந்தத் திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள்.